2014 ஜூலை 17]

175—

கடல் அலை தடுப்புத் துறைமுகம்

*7713—திரு. என்.வி. காமராஜ்:

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, ஆறுகாட்டுத்துறையில் கடல் அலை தடுப்புத் துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 2013–2014 ஆம் ஆண்டு மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின்போது நாகப்பட்டினம் மாவட்டம், ஆறுகாட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆறுகாட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறுகள் மற்றும் மாதிரி வடிவமைப்பு ஆய்வுகள் மேற்கொள்வதற்கான ஆலோசகர், அதாவது Consultancy Service Provider–ஐ நியமிக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அந்த ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. இதற்கான ஆலோசகர் நியமனம் செய்யப்பட்ட பின்னர் விரிவான திட்ட மதிப்பீடு (Detailed Project Report) தயாரிக்கப்பட்டு, விரைவில் ஆறுகாட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களின் வாழ்க்கை வளம் பெற, மீனவ மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களை அறிந்து அவர்களின் துயரத்தைப் போக்கிட, மீன்பிடித் தடைக் காலங்களில்

நிவாரணமாக ரூ.2,000/– மற்றும் மழை, வெள்ளம் போன்ற மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல இயலாத காலங்களில் ரூ.4,000/– எனக் கொடையளித்து, மீனவ மக்களின் மீனவ நண்பனாக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறுகாட்டுத்துறை மீனவ மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும் என்பதாகும். என்னுடைய இந்தக் கேள்வி பேரவைக்கு வரும் முன்னரே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு ஆணையிட்ட மீனவ மக்களின் கலங்கரை விளக்கம் எங்கள் அம்மா, மீனவ மக்களின் பாதுகாவலர், எங்கள் தங்கம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மீனவ மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

176—

மின்னணுவியல் நகரம்

***29150—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதியில் மின்னணுவியல் நகரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS